සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## புவியியல் - භූගෝල විද්‍යාව

தரம் : **7** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

. இலங்கை இந்தியாவுக்கு ...................... திசையில் அமைந்துள்ளது.
( வடக்கு / தெற்கு / மேற்கு )

2. புவிமேற்பரப்பில் அதிகமான பகுதிகள் ....................... இனால் மூடப்பட்டுள்ளது.
( நீர் / நிலம் / பள்ளம் )

3. உலகின் மிக சிறிய சமுத்திரம் ............................ சமுத்திரமாகும்
( இந்து / அத்திலாந்திக் / ஆட்டிக் )

4. மாதிரி பூகோளத்தில் வடக்கில் இருந்து தெற்காக வரையப்படும் கோடு ....................... ஆகும்.
( அகலக்கோடு / நெடுங்கோடு / துருவம் )

5. இலங்கை நிலத்தோற்ற பிரிவுகளுள் தெளிவாக தெறியக்கூடிய அதிக தரைதோற்றப் பண்புகளை ......................... பிரிவில் காணலாம்.
( மலைநாட்டு நிலத்தோற்றம / உலர்வலய நிலத்தோற்றம் / ஈரவலய நிலத்தோற்றம் )

- இலக்கம் 6-10 வரையுள்ள வினாக்களுக்கு சரியாயின் (✓)எனவும், (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குள் அடையாளமிடுக.

6. இலங்கைக்கு நவம்பர் தொடக்கம் ஜனவரி வரை அதிக மழை கிடைப்பது வடகீழ் பருவக்காற்று மழையால் ஆகும். ( )

7. கோணேஷ்வரம் கோவில் அமைந்திருப்பது யாழ்பாண மாவட்டத்திலாகும் ( )

8. இலங்கை இடைவெப்பவலய காலநிலை வலயத்திற்கு உரிய நாடாகும் ( )

9. இலங்கையின் எழுத்தறிவு 92% ஆகும் ( )

10. கச்சத்தீவு யாழ்ப்பாண குடாவிற்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு தீவாகும் ( )

- இலக்கம் 11-15 வரையிலான வினாக்களுகளின் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

11. கடற்கரை எல்லையிலிருந்து ....................... கடல்மைல் வரையான எல்லையை ஆள்புலக்கடல் எல்லை எனப்படுகிறது.

12. கஸ்பியன் கடலும் ஏரல் கடலும் ............... ........... கண்டத்தில் அமைந்துள்ளது.

13. இலங்கையின் பரப்பளவு …………………………………… சதுர கிலோமீற்றர் ஆகும்.

14. புவியின் முனைவுப் பகுதி …………………………………… தன்மையை கொண்டது.

15. ……………………………… காடு ஈரவலயத்தில் காணப்படும் உலக மரபுரிமையாகும்.

♦ இலக்கம் 16-20 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.

16. உலகின் மிகச் சிறிய கண்டம் பின்வருவனவற்றுள் எது?
   1. ஐரோப்பா கண்டம் 2. அத்திலாந்திக் கண்டம்
   3. அவுஸ்திரேலியா கண்டம் 4. வடஅமெரிக்கா கண்டம்

17. புவியின் வடிவம் தொடர்பான சரியான கூற்றை தெரிவு செய்க.
   1. பூரணமான கோளவடிவமாகும்
   2. மத்திய கோட்டு சுற்றளவு முனைவு சுற்றளவைவிட கூடுதலாக இருக்கும்.
   3. அரைக் கோளமாகும்.
   4. முனைவு சுற்றளவு மத்திய கோட்டு சுற்றளவைவிட கூடுதலாக இருக்கும்.

18. உலர் வலயத்தில் காணப்படும் எச்சக்குன்று பின்வருவனவற்றுள் எது?
   1. நமுனுகுல 2. சிவனொலிபாதமலை
   3. ரிடிகல 4. கிரிகாலபொத்த

19. மலைநாட்டு நிலத்தோற்றம் உரித்தாவது கடல் மட்டத்தில் இருந்து
   1. 5000 மீட்டரை விட உயரமான பகுதி
   2. 100 மீட்டரை விட உயரமான பகுதி
   3. 300 மீட்டரை விட உயரமான பகுதி
   4. 1000 மீட்டரை விட உயரமான பகுதி

20. இலங்கையின் யாழ்பாணக் குடா நாட்டில் விவசாயத்திற்கு நீர் பெறப்படும் முறை பின்வருவனவற்றுள் எத?
   1.நதிநீர் 2.கிணற்றுநீர் 3.மழைநீர் 4.நீர்பாசண திட்டநீர்

(20 X 2 = 40 புள்ளிகள்)

**பகுதி** II

- முதலாம் வினா உட்பட மொத்தமாக 5 வினாக்களுக்கு விடை எழுதுக.

01. i) கீழே கொடுக்கப்பட்டுள்ள உலகப்படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ளவற்றை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




1.மத்திய கோட்டை காட்டும் ஆங்கில எழுத்து ……………………………..……………

2.அத்திலாந்திக் சமுத்திரத்தை காட்டும் ஆங்கில எழுத்து ……………………………….

3.உலகின் மிகப்பெரிய தீவை காட்டும் ஆங்கில எழுத்து …….……………………………

4.D எழுத்தால் காட்டப்படும் கண்டம் எது? ..........................................................................

5.மடகஸ்கர் தீவை காட்டும் ஆங்கில எழுத்து …….…………………………….…………

6.G எழுத்தால் காட்டப்படும் தீவு எது? .........................................................................

(புள்ளி 6)

ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள இலங்கைப்படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ளவற்றை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




1. தென்மேல் பருவக்காற்றை காட்டும் ஆங்கில எழுத்து …………….

2. A எழுத்தால் காட்டப்படும் துறைமுகம் …..........

3. மகாவலி கங்கையை காட்டும் ஆங்கில எழுத்து ..................................

4. E எழுத்தால் காட்டப்படும் நகரம் …………………..…..……..

5. மன்னார் தீவை காட்டும் ஆங்கில எழுத்து .........

6. G எழுத்தால் காட்டப்படும் நகரம் ……………………………

(புள்ளி 6)

iii) இலங்கையின் ஒவ்வொரு சூழற் தொகுதிகளிலும் வெவ்வேறு வகையான தாவரங்கள் வளர்கின்றன. கீழே படத்தில் பல்வேறுபட்ட சூழற் தொகுதிகளில் வளரக் கூடிய தாவரங்கள் காட்டப்பட்டுள்ளன. இப்படத்தைப் பயன்படுத்தி இத் தாவரங்கள் எந்த சூழற் தொகுதிக்கு உரித்துடையதென எழுதுக.

| A | B | C | D |
|---|---|---|---|
|  |  |  |  |

(புள்ளி 4)

02. 1. இலங்கையின் கலாசார மரபுரிமைகள் இரு வகைப்படும் அது தொடர்பான தகவல் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை காணக்கூடிய, காணமுடியாத மரபுரிமைகள் என வேறுபடுத்தி எழுதுக.

| | |
|---|---|
| காணக்கூடிய மரபுரிமைகள் | 1.ஹிக்கடுவ கடற்கரை<br>2.நீர் வீழ்ச்சி<br>3.பழக்கவழக்கம்<br>4.மதிப்பு மரியாதை |
| காணமுடியாத மரபுரிமைகள் | 5.ஸ்ரீ மகா போதி<br>6.விருந்தினரை உபசரித்தல்<br>7.நாமல் பூங்கா<br>8.முதியோரை கௌரவித்தல் |

(புள்ளி 8)

2. இலங்கையில் பல்வேறுபட்ட இனத்தவர்கள் வாழ்கின்றனர். அதில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் போன்ற இனத்தவர்கள் பிரதானமானவர்கள். இவ்வினத்தவரிடையே காணக்கூடிய தனித்துவமுடைய கலாச்சார விழாக்கள் மூன்றை குறிப்பிடுக.

(புள்ளி 3)

03. மாதிரிப் பூகோளத்தின் படமொன்று கீழே தரப்பட்டுள்ளது. ஆதை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.




1. இம் மாதிரி பூகோளத்தில் A,B எழுத்தால் காட்டப்படும் பிரதான நெடுங்கோட்டை பெயரிடுக. (புள்ளி 2)
2. பிரதான நெடுங்கோடு புவியை இரு பகுதிகளாக பிரிக்கின்றன இவ்விரு பகுதிகளையும் பெயரிடுக. (புள்ளி 2)
3. இம் மாதிரி பூகோளத்தில் $0^0$ கோடு எவ்வாறு அழைக்கப்படும். (புள்ளி 2)
4. E,F எழுத்தினால் காட்டப்படும் அகலக்கோட்டை பெயரிடுக. (புள்ளி 2)
5. நாடென்றின் அமைவிடத்தை காட்டக்கூடிய முறைகள் இரண்டாகும். அவ்விரண்டையும் குறிப்பிடுக. (புள்ளி 3)

04. தரப்பட்டுள்ள தரவுகளை பயன்படுத்தி குறுகெழுத்து சட்டத்தை பூரணப்படுத்துக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ▨ | ▨ | 2 | ▨ | ▨ | ▨ | ▨ | ▨ | ▨ |
| ▨ | ▨ | ச | ▨ | ▨ | 3 | ▨ | ▨ | ▨ |
| 1 க | ▨ | | ▨ | 7 | | ழா | | ▨ |
| | ▨ | | ▨ | ▨ | | ▨ | ▨ | ▨ |
| 8 க | | | 4 | ம | | ▨ | ▨ | ▨ |
| | ▨ | ▨ | | ▨ | ▨ | 5 க | | |
| 9 | | ம் | ▨ | 6 | ▨ | | ▨ | ▨ |
| | ▨ | ▨ | ▨ | | ▨ | ட | ▨ | ▨ |
| ▨ | 10 | | பா | | ▨ | | ▨ | ▨ |

*மேலிருந்துகீழ்*

1. மாதிரி பூகோளத்தின் வடக்கு 23 1/2$^0$
2. வடக்கிழ் பருவக்காற்று மழை கிடைக்கும் மாதம் ஒன்று.
3. உலகில் மிக உயர்ந்த மலை
4. தென் மாகாணத்தில் உள்ள மாவட்டம் ஒன்று
5. கரையோர நிலத்தோற்றத்தில் காணக்கூடிய முக்கியமான தாரவரம் ஒன்று.
6. இலங்கை ………… வலயத்திற்குறிய நாடாகும்.

**இடமிருந்து வலம்**

5. இலங்கையில் உள்ள மேட்டு நிலங்களில் ஒன்று.
7. முஸ்லீம்களால் கொண்டாடப்படும் பண்டிகை ஒன்று.
8. தேசிய மரபுரிமையான வழிபாட்டிடம் ஒன்று.
9. புவியின் வடிவம்
10. இலங்கையில் ஆதிவாசிகள் வாழும் இடம் ஒன்று.

(புள்ளி 11)

05. இலங்கையின் பிரதான நிலத்தோற்றங்களும் அதன் விஷேட பண்புகளும் கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றை பொருந்தக் கூடிய வகையில் தொடர்ப்புபடுத்துக.

1.
   - I. மலைநாட்டு நிலத்தோற்றம்
   - II. உலர்வலய நிலத்தோற்றம்
   - III. ஈரவலய நிலத்தோற்றம்
   - IV. யாழ்பாண குடாநாடு
   - V. கரையோர நிலத்தோற்றம்

   1. சுண்ணாக்கல் அதிகம் காணப்படல்
   2. அதிக சனத்தொகை வாழுதல்
   3. அதிக மழைவீழ்ச்சி கிடைத்தல்
   4. குடா, கழப்பு, முனை காணப்படல்
   5. அதிகமான குளங்கள் காணப்படல்
   6. நீர்வீழ்ச்சி,மலைத்தொடர்,மேட்டு நிலம் என்பன காணப்படல்

(புள்ளி 6)

2. இலங்கையின் மத்திய மலைநாட்டில் காணப்படும் பிரதான மலைத்தொடர் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

3. இலங்கையின் மத்திய மலைநாட்டில் காணப்படும் நீர்வீழ்ச்சிகள் இரண்டைகுறிப்பிடுக. (புள்ளி 2)

06. தென் ஆசிய வலயத்தின் படமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது. இங்கு ஆங்கில எழுத்தால் காட்டப்பட்டுள்ள நாடுகளின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எதிரே எழுதுக.

(நேபாளம் / பூட்டான் / மாலைத்தீவு / இலங்கை / பங்காளதேசம் / பாகிஸ்தான் /இந்தியா)

1. A…………………………
   B…………………………
   C………………………..
   D…………………………
   E…………………………
   F…………………………




(புள்ளி 6)

2. அடைப்புக்குள் தரப்பட்டுள்ள விடைகளை பயன்படுத்தி இடைவெளிகளை நிரப்புக.

புவியானது விசாலமான சமுத்திரங்களையும் கண்டங்களையும் உள்ளடக்கியது. நீரினால் சூழப்பட்ட பரந்த நிலப்பரப்பு ………………… எனப்படுகிறது. உலகில் உள்ள மிகப் பரந்த சமுத்திரம் ………………………….. சமுத்திரமாகும். உலகில் மிக ஆழமான இடமாக …………………….. அகழியும் ………………………… சிகரமும் உலகில் மிக உயர்ந்த இடமாக காணப்படுகின்றது. இலங்கையானது இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு …………………… ஆக காணப்படுகின்றது.

(எவரஸ்ட் / தீவு / மாலைத்தீவு / மரியானா / பசுபிக் / அத்திலாந்திக் / கண்டம்)

(புள்ளி 5)

07. இலங்கை சமூக அபிவிருத்தியில் உயர்மட்டத்தில் உள்ள ஒரு நாடாக உள்ளது. இதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் கீழே அடைப்பினுள் காட்டப்பட்டுள்ளது. இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள தலைப்புக்கு பொருத்தமான காரணிகளை தெரிந்தெடுத்து பிரதான அட்டவணையை பூர்த்தி செய்க.

1.

| சிறந்த போஷாக்குள்ள உணவை பெறல் | மருத்துவ சுகாதாரத் துறைவசதிகள் மேம்பாடடைதல் | கல்வி வசதிகள் முன்னேற்றமடைதல் |
|---|---|---|
| உம் -<br>நோய்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய சக்திஅதிகரித்தல்<br><br>1…………………………<br>4………………………….. | ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்<br><br>2…………………………..<br>5………………………… | எழுத்தறிவு முன்னேற்றம் அடைதல்<br><br>3…………………………<br>6…………………………<br>7…………………………<br>8………………………… |

(புள்ளி 8)

- நோய்களுக்கு தாக்குப்பிடிக்கக் கூடிய சக்தி அதிகரித்தல்
- உள உடல் ஊட்டம் அதிகரித்தல்
- ஆயுள் எதிர்பார்கை மேம்பாட்டடைதல்

- எழுத்தறிவு முன்னேற்றம் அடைதல்
- வாழ்கைத்தரம் உயர்வடைதல்
- சிறந்த தொழில் வாய்ப்பு கிடைத்தல்
- நல்ல மனபாங்கு ஏற்படல்

- ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்
- சிசு மரண வீதம் குறைவடைதல்
- கர்பினி தாய்மார்கள் அதிகரித்தல் ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தல்

2. இலங்கை மக்களின் எழுத்தறிவு வீதம் உயர்மட்டத்தில் இருப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.